**அசல் வழக்கு எண். 224/2020-ல்**
**இடைமனு எண். 02/2025**
**நாள். 16.04.2026**

வழக்கு சொத்தையும், இரு தரப்பினரது ஆவணத்தையும் நேரில் பார்வையிட்டு நில அளவை செய்து நான்கு எல்லைகளையும், ஆக்கிரமிப்புகளையும், கட்டுமானங்களையும் கண்டறிந்து வரைபடத்துடன் கூடிய ஒரு விரிவான ஆய்வறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் ஒருவரையும், சீர்காழி தாலுக்கா நில அளவையரையும் நியமனம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 26, விதி 9-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது வழக்கு B ஷெடியூல் சொத்தினை காலி இடமாக வாதி வசம் ஒப்படைக்க சுவாதீன மீட்பு பரிகாரம் வாதிக்கு வழங்க கோரியும், வழக்கு B அயிட்ட சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை பிரதிவாதிகள் அகற்ற, பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், தவறும் பட்சத்தில் வாதியே அகற்றி, அதற்கான செலவுத் தொகையை பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1,2,3 எதிர்மனுதாரர்கள்/ 1,2,3 பிரதிவாதிகள் தரப்பில், அசல் வழக்கில் பிரதிவாதிகள் வாதியாக இருந்து சமூகம் நீதிமன்றத்தில் OS.NO.223/2018 என்ற வழக்கை தொடர்ந்து அது தற்போது தாவா சொத்தையும் எதிர்மனுதாரர்கள் சொத்தையும் வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் மூலம் அளவீடு செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு அது நீதிமன்றத்தார் அவர்களால் அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்வதற்காக நிலுவையில் உள்ள நிலையில் தற்போது இவ்வழக்கில் அதே பிரச்சினை தொடர்பாக வழக்குச் சொத்திற்கு வழக்கறிஞர் ஆணையர் மற்றும் சர்வேயர் நியமனம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல மற்றும் செல்லத்தக்கதல்ல என்றும், OS.NO.223/2018-ல் முன்னதாகவே ஆணையர் நியமனம் செய்த பின்பு மனுதாரர் இந்த வழக்கிற்கு வழக்கறிஞர் ஆணையர் மனு தாக்கல் செய்வது தேவையற்றதாகும் என்றும், மேற்படி 'B' அட்டவணை பொருத்து OS.NO.223/2018 ல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு உள்ளது என்றும், ஒரே சொத்திற்கு இரண்டு வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய இயலாது என்றும், எனவே, இம்மனுவை மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.16 18:17:47 +0530

வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4,5,6 எதிர்மனுதாரர்கள் /4,5,6 பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டுள்ளனர்.

அசல் வழக்கானது சுவாதீன மீட்பு பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நீதிமன்றம் தெளிவான முடிவிற்கு வர நீதிமன்ற ஆணையரின் அறிக்கை உதவிகரமாக இருக்கும் என்பதால் வழக்கு சொத்தையும், இரு தரப்பினர்களது ஆவணத்தையும் நேரில் பார்வையிட்டு நில அளவை செய்து ஆக்கிரமிப்புகளையும் கட்டுமானங்களையும் கண்டறிந்து வரைபடத்துடன் ஒரு விரிவான ஆய்வறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரையும், அவருக்கு உதவியாக தகுதி வாய்ந்த நிலஅளவையர் ஒருவரையும் நியமனம் செய்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,** இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் R. ஆத்மநாதன் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து இரு தரப்பிலும் சமர்ப்பிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய்த் துறை ஆவணங்களின் அடிப்படையிலும், தகுதி வாய்ந்த நில அளவையருடன் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு, ஆக்கிரமிப்பு பரப்பை கண்டறிந்து அளவீடு செய்து வரைபடத்துடனும், அளவுகளுடனும் கூடிய அறிக்கையை 4 வாரத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.8,000/- நிர்ணயம் செய்து அதனை மனுதாரர்கள் 29.04.2026 -க்குள் நேரடியாக கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய

**அழைக்க -10.06.2026**

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.16 18:17:54 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**
**(16.04.2026)**

**அசல் வழக்கு எண். 224/2020-ல்**
**இடைமனு எண். 02/2025**
**நாள். 16.04.2026**

உத்தரவு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**முடிவில்,** இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து இரு தரப்பிலும் சமர்ப்பிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், வருவாய்த் துறை ஆவணங்களின் அடிப்படையிலும், தகுதி வாய்ந்த நில அளவையருடன் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டு, ஆக்கிரமிப்பு பரப்பை கண்டறிந்து அளவீடு செய்து வரைபடத்துடனும், அளவுகளுடனும் கூடிய அறிக்கையை 4 வாரத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.8,000/- நிர்ணயம் செய்து அதனை மனுதாரர்கள் 29.04.2026 -க்குள் நேரடியாக கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய

**அழைக்க -10.06.2026**

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.16 18:18:01 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**
**(16.04.2026)**